என் ஆடைகளைக் கலைத்து வாட்டிப் பார்க்கிறது. இவரோ, '**அருளிலாளர் பொருள் வயினகல**' நான் தனியாகச் சிக்கிக் கொண்டேன். அவன் அன்பற்றவன். இல்லையேல் பொருளுக்காக என் போகத்தைத் துறந்து போயிருப்பானா? நானே மழையிலும் அணையாத பிரிவுத் துயரமெனும் தீயினால் அல்லல்பட, அறிவற்ற ஊர் மக்களோ இதை உணர மாட்டாது புல்லாங்குழல் வாசித்துப் புளகாங்கிதம் அடைகின்றனர். அது உத்தமக் குழல் அல்ல! என் விரகத் தீயை வளர்க்கும் ஊது குழல்" என்று அந்தத் தலைவி புலம்புவதை அகநானூறு வர்ணிக்கும்போது இசைபாடும் குழலின் மீதே வசை பாடத் தோன்றுகிறதல்லவா நமக்கு? தங்கத் தமிழின் பெருமைக்கு இது போன்ற சங்கத் தமிழ்ப் பாடல்கள் ஏராளம் சான்றாகும்.

## அறவிலை வணிகர்கள்

**சி**லர் ஊரார் செல்வத்தை வளைத்துப் போட்டு, அள்ளியதில் ஏதோ சிறிது கிள்ளிக் கொடுத்து, 'வள்ளல்' என்று பெயர் வாங்கத் துடிப்பார்கள். மிகப் பலர், 'இப்பிறவியில் தான தர்மம் செய்தால் இறந்த பின் சுவர்க்கம் புகலாம்; மறுமையிலும் செல்வந்தன் ஆகலாம்' என்ற கணக்கோடு அறச் செயல் புரிவார்கள். இவர்களில் முதலாவது ரகத்தை சங்க காலம் கண்டதில்லை போலும்! இரண்டாவது பிரிவினரைப் பற்றி 'உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்' என்னும் புலவர் ஏசுகின்ற பாடல், புறநானூற்றில் பதிந்துள்ளது.



'ஆய் அண்டிரன்' என்றோர் அரசன். அவனது வள்ளல் தன்மை வானையும் முட்டும் பெருமையுடையது. ஆனால் 'தர்மம் செய்தால் கர்மம் தொலையும்' என்ற கணக்குடன் பிணக்குடையான் அவன். 'எனக்கு முன் வாழ்ந்த சான்றோர்கள் அறம் செய்ய விரும்பி, அதனைக் கடமையாய் ஆற்றினார்கள். அதைக் கண்டே நானும் அவ்வண்ணம் இயங்குகின்றேன்' என்ற இயல்புடையவனாம் அந்த இனிய மன்னன்.

அவனது, 'ஈத்துவக்கும் இன்பத்தை' எதிரே நின்று கண்ட முடமோசியார், '**சான்றோர் சென்ற நெறியென ஆங்குப் பட்டன்று அவன் கை வண்மையே**' என்று அன்னைத் தமிழால் அண்டிரனை ஆராதிக்கின்றார். அது மட்டுமின்றி, '**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அலன்**' என்று அடித்துப் பேசுகின்றார்.

# மொழி மாதவர்



இம்மையில் புகழுக்காகவோ, மறுமையில் சுகப்படவோ தர்மம் செய்வாரை, '**அறவிலை வணிகன்...**', அதாவது 'வள்ளலென்ற பெயரில் புழங்கும் வியாபாரிகள்' என்று முடமோசியார், பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இடித்துரைத்திருப்பது, இன்றைக்கு அதிகம் பொருந்துகின்ற அற்புத வார்த்தைகளன்றோ?

## நீயும் ஒரு பெண்ணா?

**தா**ன் படும் அல்லலை ஓர் ஆண் புரிந்து கொள்ளாவிட்டால் கூட அத்தனை ஆத்திரம் வராது ஓர் பெண்ணுக்கு! ஆயின் அத்துன்பத்தை ஒரு பெண்ணே புரிந்து கொள்ளவில்லையென்றால் பொறுக்க முடியாது அவளுக்கு.

இதோ 'முத்தொள்ளாயிரம்' இனம் காட்டும் அச்சினம் காண்போம் வாரீர். தலைவி வாழும் தெரு வழியே பாண்டியன் ஊர்வலமாய்ப் போகின்றான். அந்தச் சேதி தெரிந்ததும் மோதி முட்டிக் கொண்டு ஓடி வந்து, வீதியில் வந்து நிற்பதை வெட்கம் தடுக்க, பாதி திறந்து வைத்த கதவருகே நின்று, படபடக்கும் இமைகளை அடக்கி வைத்து, பாலூறா தனங்களை கதவுகளோடு முடக்கி வைத்து, ஆவலோடு பார்த்து நிற்கிறாள் பாவை.

ஆனால் மாத்திரைப் பொழுதில் அந்த யாத்திரை இவளைக் கடந்துவிட்டது. ஆத்திரம் வருகிறது அவளுக்கு! பாண